உங்களுடைய விசுவாசத்தை ஊக்குவித்து, உங்களுடைய ஆவியைப் புதுப்பிக்கும் மேற்கோள்களின் ஒரு தொகுப்பு

# உபவாசம்

# FASTING

தமிழாக்கம்

**பாஸ்டர் J. சேவியர்**

மகத்தான தீர்க்கதரிசியாகிய வில்லியம் மரியன் பிரன்ஹாம் அவர்கள் அளித்த செய்திகளிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள்

2 நாளா 20:2,3

சிலர் வந்து, யோசபாத்தை நோக்கி: உமக்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலிருக்கிற சீரியாவிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன்தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள்.

அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான்.

எஸ்றா 8:23

அப்படியே நாங்கள் உபவாசம்பண்ணி, எங்கள் தேவனிடத்திலே அதைத் தேடினோம்; எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்.

நெகே 1:4

இந்த வார்த்தைகளைக் கேட்டபோது நான் உட்கார்ந்து அழுது, சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி:

எஸ்தர் 4:16

நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும்

சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்.

ஏசா 58:3

நாங்கள் உபவாசம்பண்ணும்போது நீர் நோக்காமலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது நீர் அதை அறியாமலிருக்கிறதென்ன என்கிறார்கள்; இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து, உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறீர்கள்.

தானி 9:3

நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி,

யோவே 1:14

பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்; மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலே கூடிவரச்செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

யோவே 2:12

ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யோவே 2:15

சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்.

யோனா 3:5

அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள்.

மத் 6:16

நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத் 6:17

நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு.

மத் 17:21

இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்.

லூக் 2:37

ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள்.

அப் 10:30

அதற்குக் கொர்நேலியு: நாலுநாளைக்கு முன்னே இந்நேரத்திலே நான் உபவாசித்து, ஒன்பதாம்மணி நேரத்தில் என் வீட்டிலே ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த மனுஷன் ஒருவன் எனக்கு முன்பாக நின்று:

அப் 13:2

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்.

அப் 14:23

அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து

ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.

2 கொரி 11:27

பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்.

*இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரான்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:*

நான் — நான் எவ்வாறு முயற்சிக்கிறேன் என்பதை அநேக ஜனங்கள் அறிந்துள்ளபடி, **வழக்கமாக நான் ஜெப வரிசையைத் தொடங்குவதற்கு முன், நான் மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபிக்கிறேன்,**

*ஊழியம் தெளிவாக்கப்பட்டது, 50–0711, பத்தி எண் 2*

ஆகவே, அதனால், நண்பர்களே, உங்கள் சகோதர னாக இருக்கிறேன், அவ்வளவு தான். ஆனால் தேவனுடைய வரமோ, அது ஒரு தூதனுடைய வடிவத்தில் இறங்கி வருகிற தேவனுடைய ஆவியாகும். இப்போது, அவருக்கு இறக்கை கள் கிடையாது. அவர் ஒரு மனிதனைப் போலக் காணப் பட்டார். அவர் நடந்தபோது, அவருடைய சத்தத்தைக் கேட் டேன். [தீர்க்கதரிசி பிரன்ஹாம் அதைச் செய்து காட்டுகிறார் — ஆசிரியர்.], அது போலவே அவர் தரையில் நடந்தார். ஒரு மனிதன் எவ்வாறு நடப்பானோ அவ்வாறே அங்கே நடந்தார்,

மனிதன் பேசுவது போலவே பேசுகிறார். அவர் அடிக்கடி வருகிறார், அறைக்குள்ளாகவும், **நான் உபவாசித்து ஜெபிக்கும் போதெல்லாம் வெவ்வேறு இடங்களிலும் அவர் வருகிறார்.**

*தூதனுடைய சத்தத்துக்குக் கீழ்ப்படியுங்கள்*, 50–0713, பத்தி எண் 13

என்னைப் பொறுத்த மட்டில், நான் ஒரு பிரசங்கியல்ல. நான் வெறுமனே... வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்பதற்காக நான் அனுப்பப்பட்டேன். **பகல் முழுவதும் நான் ஜெபத்தில் நேரத்தைக் கழிக்கிறேன். இரவின் கடமையைச் சந்திக்க வேண்டுமானால், நான் அதைச் செய்ய வேண்டும். உபவாசித்து ஜெபிக்கும் போது, வியாதியஸ்தர்கள் உன்னிலிருந்து ஜீவனைப் பெறுகிறார்கள்.**

*உம்முடைய வார்த்தையின்படியே*, 50–0714, பத்தி எண் 2

அவள் அங்கே வந்து, “சகோதரன் பிரன்ஹாம்” என்றாள். மேலும் அவள், “ஒவ்வொரு கூட்டத்திற்கும் தொடர்ந்து வந்து, என்னுடைய சகோதரனை ஜெபவரிசையில் நிற்க வைக்க முயற்சி செய்கிறேன். அதை என்னால் செய்ய முடியவில்லை” என்றாள். “அவனுடைய இருதயம் மிகவும் மோசமடைந்துள்ளது, இப்போது, மார்பையும், வயிற்றையும் பிரிக்கும் மெல்லிய ஜவ்வு வழியாகத் தள்ளிக் கொண்டு வருகிறது” என்று கூறினாள். “இங்கு வருவதற்குச் சில நாட்களுக்கு முன்பு, நாங்கள் பரிசோதித்துப் பார்த்தோம், அவன் கொஞ்ச காலமே வாழ்வான் என்று மருத்துவர் கூறினார். டெக்ஸாஸிலிருந்து இங்கு வருவதற்காக, எங்கள் பசுமாட்டை விற்று பணம் பெற்றோம்” என்று கூறினாள். “அநேகக் கூட்டங்களில் நான் இருந்துள்ளேன்; எங்களுக்கு

உரியவைகள் யாவற்றையும் நாங்கள் விற்று விட்டோம்" என்றாள். "அங்கே அநேகர் இருப்பதைப் பார்த்தேன், அதைச் சென்றடைய முடியாது என்று பார்த்தேன். நான் அநேக முறை ஜெப அட்டையைப் பெற்றேன், ஆனால் அந்த எண் ஒருபோதும் அழைக்கப்படவில்லை" என்றாள். **அவள், "ஆனால், நான் கடந்த இரவில், இரவு முழுவதும் உபவா சித்து, ஜெபித்துக் கொண்டிருந்தேன்" என்றாள். (அவள் கூறினாள்) "மேலும் இந்த நாள் காலையின் பகல் வேளை யில், ஒரு சொப்பனம் கண்டு, நான் எழுந்தேன். நான் இந்த உணவு விடுதிக்கு வர வேண்டும் என்றும், ஒன்பது மணிவரைக் காத்திருக்க வேண்டும் என்றும் சொப்பனம் கண்டேன்" என்றாள்.**

*ஆவியானவரால் வழிநடத்தப்படுதல்*, *50–0715*, *பத்தி எண் 23*

**இப்போது, சுகமாக்கும் அந்த அபிஷேகம் இருக் கும் போது, நான் உபவாசித்து ஜெபித்துக் கொண்டேயிருப் பேன்.** அது உங்களை ஒரு உண்மையான, அமைதியான, தெய்வீகமான உணர்வைப் பெறும் இடத்திற்கு உங்களை அடையச் செய்யும், அது மகிழ்ந்து களிகூருவது போல் இருக்காது; உண்மையான தெய்வீகமான உணர்வைப் பெறுவீர்கள். ஆனால், பரிசுத்த ஆவியைக் குறித்து பேசும் போது, அது சந்தோஷத்துடன் வருகிறது, மேலும் மகிழ்ச்சி யையும், இன்பத்தையும், கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து புத்துணர்ச்சியைக் கொண்டுவருகிறது. இந்த மத்தியான வேளையில் அதைப் பெற்றிருப்பதற்காக நான் மிகவும் சந்தோஷமடைகிறேன்.

*இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?*, *50–0716*

ஆகவே, இப்படியிருக்கையில், இந்த மேடையில், நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எல்லா வற்றிற்கும் [மேலாக] சாத்தான் விரும்புகிறது என்னவென் றால் – பொது மக்கள் முன்பாக அதை விளம்பரப்படுத்த விரும்புகிறான். **ஆகவே இப்படியிருக்கையில், நான் உபவாசித்து, ஜெபத்தில் இருந்து, ஒவ்வொரு நிமிஷமும் அந்தப் பாதுகாப்பில் இருந்து கொண்டு, எதையோ எதிர் பார்த்தவனாய் இருக்க வேண்டும்.**

*லாசருவின் உயிர்த்தெழுதல், 50–0813A, பத்தி எண் 4*

நாங்கள் பின்லாந்தில் கூவோபியா என்னுமிடத்தில் இருக்கும் போது, அது மேலே ஒரு மலை நடுவே உள்ள பள்ளத்தாக்கிற்குப் போகும் வழியின் அருகில் உள்ளது. அது நடுஇரவில் சூரியன் உதிக்கும் தேசமாகும். **அங்கே உயரத் தில் ஒரு கோபுரத்தில் உபவாசித்துக் கொண்டிருந்தேன்.**

*அது எனக்கு சொல்லப்பட்டபடியே இருக்கும், 50–0818, பத்தி எண் 30*

**இது ஒரு உபவாச நாளாக இருக்கிறது, இந்த இரவில் ஜனங்களாகிய உங்கள் மீது தேவன் தம்முடைய ஆசீர்வாதத்தை அருளிச் செய்ய வேண்டும் என்று உபவா சித்து ஜெபித்துக் கொண்டிருக்கிறேன்.**

*நான் செய்கிற கிரியைகளே என்னைக் குறித்து சாட்சி கொடுக்கின்றன, 51–0413, பத்தி எண் 8*

**இந்த இரவுக்காக அவர் உபவாசித்தும், ஜெபித்தும் கொண்டிருந்தார், அவ்வாறு இருக்கும் போது, அவர் எச்சரிக்கப்பட்டார். ஆகவே அவர் இங்கு வந்தார், தேவன் அவரை விடுவித்தார்.**

*தெய்வீக சுகமளித்தலைக் குறித்த புத்திமதி, 51-0501, பத்தி எண் 50*

இப்போது — மற்றுமொரு கேஸ். ஒரு சில வாரங்களுக்கு முன்பு, நான் லாஸ் ஏஞ்சலிஸில் நின்று கொண்டிருந்தேன். பின்னால் இருப்பவர்களால் என் சத்தத்தைக் கேட்க முடிகிறதா? உங்களால் கேட்க முடிகிறதென்றால், கரங்களை உயர்த்துங்கள்.

நான் கலிபோர்னியாவிலுள்ள லாஸ் ஏஞ்சலிஸில் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தேன். இப்போது, நாம் தொடங்குவதற்கு முன்பாக அக்கூட்டங்கள் எவ்வாறு நடந்தது என்பதைக் [கூறுகிறேன்.] கவனியுங்கள். **நான் ஜெபித்தேன்; நான் உபவாசித்தேன்.** அப்போது தான் ஒரு கூட்டத்திலிருந்து வெளியே வந்தேன்: இப்போது இரண்டு நாட்களாகப் போயிருந்தேன்; நான் வீட்டில் இருந்தேன், இரண்டு முறை வீட்டிற்குத் திரும்பிச் சென்றேன். **அங்கே நான் தனிமையில் சென்றேன், ஜெபித்து, உணவு புசிக்காமல், உபவாசித்து, காத்திருந்தேன். அங்கே ஏதோவொன்று கீழே இறங்கிவந்தது, என்னுடைய ஜீவனை, என் சரீரத்தை அதன் ஆளுகைக்குள் எடுத்துக் கொண்டது, நான் நானாக இல்லை.**

*தெய்வீக சுகமளித்தலின் விதிகள், 51-0923, பத்தி எண் 51*

பின்பு, நான் உபவாசம் இருந்ததை நினைவுகூருகிறேன்; அது இந்த நாள் இரவு எப்படி இருக்கிறதோ அப்படியிருந்தது. **வெள்ளிக்கிழமைகள் உபவாசிக்கும் ஒரு நாளாக இருக்கிறது. நீண்ட காலமாக எனக்கு அவ்வாறு இருந்து வந்திருக்கிறது.**

*உம்முடைய வார்த்தையின்படி, 51-0928, பத்தி எண் 19*

ஒருவகையான தலைவலிகளினாலும் மற்றும் எல்லா வற்றினாலும் நீங்கள் வேதனை அடைந்து கொண்டிருக்கி றீர்கள். ஒருவித வினோதமான உணர்வுகளைப் பெற்றிருக் கிறீர்கள். **கடந்த *சில* நாட்களாக நீங்கள் உபவாசித்துக் கொண்டு *வருகிறீர்கள், அவ்வாறு* செய்கிறீர்கள் இல்லையா?** ஊ – ஊ. உபவாசிக்கத் தொடங்கியதிலிருந்து, அப்படிப்பட்ட உணர்வுகளை நீங்கள் பெறவில்லை, ஏனெ னில் அது சிறந்ததாக இருந்தது. அது சரியா? அது உண்மை தானே? நீங்கள் ஒரு அறுவை சிகிச்சை கூட பெற்றிருக் கிறீர்கள், இல்லையா? அது சரி, ஊ – ஊ. இப்போது, நான் உங்கள் மீது கைகளை வைத்து நான் தேவனிடத்தில் கேட்டால், அது உங்களை விட்டு அகன்று விடும் என்று எப்போதும் நீங்கள் விசுவாசித்து வந்தீர்கள். அந்த உணர்வுகள் உங்களைத் தாக்கும் போது, வினோதமான உணர்வுகள் உங்களுக்கு உண்டாகிறது, அது உங்களை இழுப்பது போல வும், முன்னுக்கு உந்தித் தள்ளுவது போலவும், உணர்கி றீர்கள். அது சரியா? சகோதரியே, இங்கே வாருங்கள், இது உங்களை உறுதிப்படுத்தும்.

*எதிர்பார்ப்பு, 51–0930, பத்திஎண் 56*

**சுகமாக்கும் கூட்டங்களின் போது வழக்கமாக நான் எப்போதும் உபவாசித்து, ஜெபித்துக் கொண்டிருக்கிறேன், ஆனால் கடந்த சில நாட்களாக நான் உபவாசம் செய்து கொண்டும் பிரசங்கம் (பேசிக் கொண்டும்) செய்து கொண்டு மிருக்கிறேன்.**

*இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்?, 51–1003, பத்தி எண் 10*

வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்பது என்னுடைய ஊழியமாக இருக்கிறது. அதை செய்ய வேண்டுமென்றால், மக்கள் அதைக் குறித்து கொஞ்சம் கூட அறியாத, இன்னொரு உலகத்திற்குள் நான் வர வேண்டும். அதை விவரித்து சொல்ல முயற்சிக்க வேண்டிய அவசியம் இல்லை; உங்களால் – உங்களால் அதைச் செய்யக் முடியாது. **என்னுடைய ஊழியக் கூட்டங்களுக்கு முன்பு, நான் ஏறக்குறைய மூன்று நாட்கள் வரையிலும் உபவாசத் திற்குள் செல்கிறேன். அங்கே ஒரு பரிமாணத்திற்குள் அது என்னைத் தூக்குகிறது,** நான்… நல்லது, நான் சற்றே… அது அவ்வளவு தான். அது காரியங்களையும் மற்றவைகளையும் காணும் இன்னொரு பரிமாணத்திற்குள் செல்கிறது. அதன் பின்பு கூட்டங்களுக்கிடையில், அது அப்படியே நடக்க அனுமதித்து விட்டு நான் வெளியே சென்று விடுகிறேன். நான் மீன்பிடிப்பதையும் வேட்டையாடுவதையும் விரும்பு கிறேன். மற்ற எவரையும் போன்று அதை நான் விரும்பு கிறேன். ஆகவே, [நீங்கள் பாருங்கள்?] அது - அது இங்கேயுள்ள ஒரு மனிதன், ஆனால் மனிதன் பயன்படுத்து கிறான் - அல்லது, தேவன் தம்மை மகிமைப்படுத்திக் கொள்வதற்காக மனிதனைப் பயன்படுத்துகிறார்.

*இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?, 51–1003, பத்தி எண் 15*

**அவர் – அவர் என்னுடன் இருந்தார், அந்த அறையில் நான் மூன்று நாட்கள் இருந்தேன், அந்நாட் களில் உபவாசித்தும் ஜெபித்தும் கொண்டிருந்தேன்.**

*****

**நான் உபவாசித்துக் கொண்டும் ஜெபித்துக் கொண் டும் இருந்தேன். புசிப்பதற்காக வெளியே செல்லவில்லை.**

*தேவனுடைய குமாரனிடத்தில் உள்ள விசுவாசம், 52–0715, பத்தி எண் 34*

ஏறக்குறைய அந்த மணி நேரத்தில், அங்கே ஒரு வயது சென்ற தீர்க்கதரிசினி தேவாலயத்தில் இருந்தாள். அவள் குருடாயிருந்தாள் என்று நமக்குச் சொல்லப் பட்டுள்ளது. அவள் பெயர் அன்னாள் என்பதாகும். அங்கே அவள் உட்கார்ந்திருந்தாள். அவள் குருடாயிருந்தாள்; அவளால் ஒருபோதும் வாசிக்க முடியாது, ஆனால் அவள் படித்துக் கொண்டிருந்தாள். அவள் தேவாலயத்தை விட்டு அகலவில்லை; **அவள் உபவாசத்தோடும், ஜெபத்தோடும் இரவும் பகலும் தேவனுக்குச் சேவை செய்தாள்.**

*ஆழம் ஆழத்தை நோக்கிக்கூப்பிடுகிறது, 52–0809, பத்தி எண் 12*

கூட்டங்களில் எப்போதும் நடக்கிறது என்னவென் றால், நான் வெளியே சென்று, ஜெபித்துக் கொண்டும், ஆயத்தமாகிக் கொண்டும், தேவனைத் தேடிக் கொண்டும், **கூட்டங்களுக்கு முன்பதாக உபவாசித்து ஜெபித்துக் கொண்டுமிருப்பேன்.** அதுதான் வழக்கமான நடைமுறை யாகும். பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் கீழ் வரும் அந்த மணி நேரம் வரைக்கும், நான் கூட்டங்களுக்கு ஒருபோதும் வந்தது கிடையாது, சரியாக வியாதியஸ்தருக்காக ஜெபிக்கச் செல்வேன்.

*இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார், 52–1027, பத்தி எண் 2*

இங்கே ஜெபர்ஸன்வில் ஊடாக முழுமையாக சென்று நிரம்பும் ஒரு கதறல் சத்தத்தை நீங்கள் கேட்கும் அளவுக்கு,

தேவன் இந்த சபையை பரிசுத்த ஆவியினால் நிரப்பப் போகிறார் என்று நான் நம்புகிறேன். நான் ஒவ்வொரு நாளும் இரவும் பகலும் காத்திருந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறேன், அந்த முக்கியமான, பயங்கரமான அந்த நேரத்தைச் [சந்திப்பதற்காகக்] காத்திருக்கிறேன். **நீங்கள் தொடர்ந்து உபவாசத்தைக் கடைபிடிக்க வேண்டும், ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும்**; குழந்தைகளை ஒருங்கே கூட்டி வைத்துக் கொள்ளுங்கள், உங்கள் வீட்டைச் சுற்றியுள்ள பாவக் காரியங்கள் எல்லாவற்றிலுமிருந்தும் விலகிக் கொள்ளுங்கள், யாக்கோபு கூறினது போல, “உங்கள் காதணிகளை கழற்றிப் போடுங்கள், உங்கள் வஸ்திரங் களைத் துவைத்து சுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்.” ஆயத்தமாகுங்கள்.

*இஸ்ரவேலும் சபையும், 53-0327, பாகம் 3, பத்தி எண் 212*

பரிசுத்தவான்களுக்குக் கிரீடங்கள் கொடுக்கப்படும் அந்த நாளில் நான் ஜெபித்தேன், நான் பின்னால் நின்று கொண்டிருந்தேன், அங்கே ஜோன்ஸ்போரோ குழுவினர் வருவதை நான் பார்த்த போது, நான் பயங்கரமாகச் சத்தமிட்டேன், நான் பயப்படுகிறேன், அவர் அவ்வாறு கிரீடம் சூட்டுவதைப் பார்த்த போது... கடைசி இராப்போஜனம் அது எப்படியிருக்கும் என்று எண்ணினேன்... அது அங்கே மகிமையில் உள்ளது. ஜெயம் கொண்ட நாம் அனைவரும், ஒருவரை அடுத்து ஒருவராய் அந்த மேஜையில் உட்கார்ந் திருந்தோம். நான் அந்த மேஜையைப் பார்ப்பேன், யுத்தத்தில் காயம்பட்ட பரிசுத்தவான்கள் அங்கு அமர்ந்திருப்பதைப் பார்ப்பேன், அவர்கள் கன்னங்களில் மகிழ்ச்சியின் கண்ணீர்

ஓடிக் கொண்டிருக்கும். நாம் அந்த மேஜைக்குக் கடந்து சென்று, ஒருவர் கரத்தை ஒருவர் பற்றிக் கொள்வோம்.

“ஓ, சகோதரனே, உன்னைப் பார்த்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்” என்று நான் கூறுவேன். அந்த நீண்ட இராப்போஜன மேஜையை சற்று நினைத்துப் பாருங்கள். பின்பு இராஜா அழகு மிகுந்த தம்முடைய வஸ்திரங்களை அணிந்தவராய் வெளியே வந்து, நம்முடைய கண்களில் உள்ள கண்ணீரையெல்லாம் துடைப்பார், “ஒருபோதும் அழுகையில்லை; நாம் அனைவரும் இப்போது இங்கிருக்கி றோம். எல்லாம் முடிந்து விட்டது. இப்போது கடைசி ஜெபக்கூட்டம் முடிந்து விட்டது: இன்னும் ஒருபோதும் உபவாசம் கிடையாது, ஒருபோதும் ஜெபிக்க வேண்டியது மில்லை. நாம் அனைவரும் வீட்டில் இருக்கிறோம். இப்போது, கர்த்தருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசியுங் கள்” என்று கூறுவார். அதைத்தான் நான் கேட்க விரும்பு கிறேன். அதற்காகத்தான் நான் கடினமாக உழைக்கிறேன். என்னால் முடிந்த அளவு இரவும் பகலும் எல்லா நேரமும் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

*தேவனால் அருளப்பட்ட வழி, 53–0513, பத்தி எண் 10*

**அந்த இரவில் அவர் அங்கு நின்று கொண்டிருந்த போது, நிச்சயமாகவே அவர் ஒரு மனிதனாக இருந்தார், அந்த மலையில் இரவு முழுவதும் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தார்.** அடுத்த நாள் அவர் கீழே இறங்கி வந்தார், சுற்றும் முற்றும் பார்த்த போது அந்த மரத்தைக் கண்டார், புசிப்பதற்கு ஏதாவது இருக்கிறதா என்று கண்டுபிடிக்க முயற்சித்தார், அங்கு ஒரு அத்தி பழமும் கூட இல்லை, அவர் புசிப்பதற்கென்று அங்கு ஒன்றும் இல்லை,

அத்தி பழங்கள் அந்த மரத்தில் இல்லை. அவர் பசியாய் இருந்த போது, ஒரு மனிதனாக இருந்தார். ஆனால் அவர் ஐந்து அப்பங்களையும், இரண்டு சிறிய மீன்களையும் எடுத்து, அதைக் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்த போது, அவர் மனிதனைக் காட்டிலும் மேலானவராக இருந்தார், அது தேவன் அவருடைய குமாரனில் இருந்ததாகும். சரி.

*கிறிஸ்துவின் ஊழியம், 53-0607A, பத்தி எண் 71*

**ஒருநாள் உபவாசம் அதிகமாக இருந்தேன்.** நாங்கள் மேலே நடு இரவில் சூரியன் உதிக்கும் தேசத்தில் இருந்தோம். அந்த இரவை நான் ஒருபோதும் மறவேன். அன்று பிற்பகல் நாங்கள் மேலே கோபியோ என்ற இடத்திற்குச் சென்றோம்;

*ஒரு சாட்சி, 53-0607E, பத்தி எண் 19*

**வழக்கமாக நான் வீட்டிலிருக்கும் போது, நான் புசிப்பதில்லை, கூட்டங்களுக்கு வருவதற்காக உவாசித்து ஜெபித்துக் கொண்டிருப்பேன்.** அது சரியாக என்னை பீடத் தண்டை நடத்தும், அங்கிருந்து நோயாளிகளுக்காக ஜெபிக் கத் தொடங்குவேன். நிச்சயமாகவே, அது கூட்டத்தை சிறப்புறச் செய்கிறது; அதை நான் அறிவேன். ஏனென்றால், நீங்கள் ஏற்கனவே அபிஷேகத்தின் கீழ் இருக்கிறீர்கள்.

*உம்முடைய வார்த்தையின்படியே, 53-0608E, பத்தி எண் 2*

அந்த நாளில், பின்லாந்திலுள்ள அந்த மலையி லிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தோம், **நான் பல நாட்களாக உபவாசம் இருந்தேன்.**

*இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?, 53-1106, பத்தி எண் 23*

இப்போது, இந்த செய்தியானது எவ்வாறு முழு உலகத்திற்கும் செல்கிறது, மில்லியன்கணக்கானோர் சுகத்தைப் பெறுகின்றனர் [அது எழுத்து வடிவில் எழுதப்பட்டுள்ளது]... ஆப்பிரிக்கக் காடுகளில் கூட, அவர்கள் மனந்திரும்பிய பிறகு, “ஒரு கல்வியைப் பெற்றுக் கொள்வது வரைக்கும் நீங்கள் தாமதிக்க வேண்டாம்; வெளியே புறப்பட்டுச் செல்லுங்கள்; வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வையுங்கள்” என்று அவர்களுக்குக் கூறினேன்.

ஏன் மேலே அந்த அடர்ந்த காடுகளில் வாழும் சுதேசிகளின் மத்தியில் சுகமாக்கும் கூட்டங்களை அவர்கள் பெற்றுள்ளனர். எது இடது கை எது வலது கை என்று கூட அறியத்தெரியாத மனிதர்கள் மத்தியில் அது நடைபெறுகிறது. ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்துள்ளனர். அதை அவர் செய்வதை அவர்கள் பார்த்துள்ளனர், அதை விசுவாசிக்கின்றனர், தங்களுடைய சுதேசி நண்பர்களுக்காக அவர்கள் ஜெபிக்கின்றனர், அவர்கள் சுகம் பெறுகின்றனர். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறார்கள், அவர்களுடைய விக்கிரகங்களை உடைத்துப் போடுகிறார்கள், பெரிய சபைகளையும், குழுக்களையும் உருவாக்குகின்றனர், **முழுஇரவும் ஜெபிக்கின்றனர், ஒரே நேரத்தில் தொடர்ந்து வாரக்கணக்கில் உபவாசம் இருக்கின்றனர்,** கல்வியறிவு இல்லை, ஒன்றும் இல்லை... அவர்கள் தேவனை விசுவாசிக்கிறார்கள், அவ்வளவே. இப்பொழுது, அதையே நீங்களும் செய்ய வேண்டும்.

*ஆயத்தம், 53–1111, பத்தி எண் 98*

நம்முடைய தலைகளைத் தாழ்த்துவோம். எங்களுடைய பரலோகப் பிதாவே, இன்றிரவில் உமக்கு நன்றி

கூறுகிறோம். ஓ, தேவனே, என்னுடைய இருதயம் கடந்த சில வருடங்களாக பின்புலக்காட்சிகளோடு அசைந்து கொண்டு இருக்கிறது, தேவனே, எப்படி... என்ன – அதை எவ்வாறு ஜனங்களிடம் கொண்டு செல்வேன்? அது தேவைப் படும் இடம் இதுதான், சரியாக இங்கேயே, கர்த்தாவே, சரியாக இங்கேயே, நான் பார்த்ததிலேயே மிக மோசமான ஒன்றைப் பார்த்தேன். எப்படியாயினும், தேவனே நான் ஜெபிக்கிறேன், தெய்வீக நியாயத்தீர்ப்பு இந்த இடத்தை தாக்குவதற்கு முன்பாக, ஏதோ சம்பவிக்கப்போகிறது, ஏதாவது செய்யப் படட்டும் என்று நான் ஜெபிக்கிறேன். இங்கிருக்கிற உம்முடைய அனேக ஊழியக்காரர்களுக்கு நான் சொல்லி வந்துள்ளேன். ***இங்கே விசுவாசம் நிறைந்த ஜனங்களை நீர் கொண்டிருக்கிறீர், ஜெபிக்கிற, உபவாசிக்கிற, பற்றிக் கொள் கிற உண்மையான ஜனங்களை உடையவராயிருக்கிறீர்.***

அதன் காரணமாகவே நீர் நியாயத்தீர்ப்புக்கு அதைத் தப்ப விடுகிறீர் என்று நான் விசுவாசிக்கிறேன். தேவனே, அவர்கள் உண்மை உள்ளவர்கள். ஆனால், இன்றிரவு இங்கிருக்கிற தேவனற்ற, கிறிஸ்து இல்லாத ஆயிரக்கணக் கான ஜனங்களை சற்றே நினைவுகூருகிறேன். அவர்கள் மீது கிருபையாயிரும். தேவனே, ஏதாவதொன்றைச் செய்யும். எழுப்புதலை அனுப்பும். ஊழியக்காரர்கள் உண்மையோடு ஊழியம் செய்கின்றனர், ***ஜனங்கள் ஜெபித்துக் கொண்டும், உபவாசித்துக் கொண்டும் இருக்கின்றனர், சிறிய தாய்மார் கள், உணவு புசிக்காமலும், தகப்பன்மார்கள், சிறிய குழந்தைகள் கூட உபவாசம் இருந்து ஜெபிக்கின்றனர்.*** ஓ, மகத்தான தேவனே, நீர்... என்பதை அறிவேன்... மனிதர்கள் சுயாதீனம் உடையவர்கள். அவர்கள் இருதயத்தை உம்மால்

தட்ட மாத்திரமே முடியும். அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

*சாட்சி, மரித்துப் போன சிறுவன் உயிரோடு எழும்புதல், 53–1203, பத்தி எண் 80*

ஒரு சிறிய இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கி றேன். நீங்கள் அதை அறிந்திருக்க மாட்டீர்கள், ஆனால் அது உண்மையாக இருக்கிறது. **இரண்டு பெண்கள் (கிறிஸ்தவ பெண்கள்) தங்களை (எங்கோ ஓரிடத்தில்) மறைத்துக் கொண்டனர். கூட்டம் முடியும் வரைக்கும் வெளியே தோன்ற மாட்டார்கள். ஒருபோதும் புசிப்பதில்லை அல்லது எதுவும் செய்வதில்லை, இந்த மேடையில் இருக்கிற எனக்காக ஜெபித்துக் கொண்டேயிருக்கின்றனர், இப்போது வரைக்கும் ஏழு நாட்களாக அங்கே இருக்கின் றனர், இந்தக் கூட்டத்திற்காக ஜெபிக்கின்றனர்.**

அதுதான் காரியத்தை நடப்பிக்கிறது. தேவன்... அவர்களுடைய தீரமிக்க ஆத்துமாக்களை ஆசீர்வதிப்பாராக. **உபவாசித்தும் ஜெபித்துக் கொண்டும் இருங்கள், தேவன் நமக்கு ஜெயத்தைத் தருவார்... அவர் நிச்சயமாக அதைச் செய்வார்.** நாம் அவரிடத்தில் கேட்டு, அவர் அதைச் செய்வார் என்று விசுவாசித்தால், அதைச் செய்வதற்கு அவர் கடமைப் பட்டுள்ளார்.

*யவீரின் மகளுடைய உயிர்த்தெழுதல், 54–0302, பத்தி எண் 2*

உங்களில் ஒவ்வொருவரும், இந்தக் கூட்டத்தை பொருள் உதவி செய்து தாங்கியுள்ளீர்கள். உங்கள் ஜெபத்தி னாலும் தாங்கியுள்ளீர்கள். இன்றிரவில், வழக்கம்போல திட்ட மிட்டபடி நடந்தால்... **இரண்டு சிறிய ஸ்திரீகள், கூட்டத்தில்**

**இந்த எட்டு நாட்களுமாகத் தங்களை மறைத்துக் கொண்டு, இந்தக் கூட்டங்களுக்காக, உபவாசித்து ஜெபித் துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கூட்டம் வெற்றியுடன் நடைபெற்றதற்கு அதுவும் ஒரு காரணமாகும்.** அது சரியே. ஒருவேளை... இன்றிரவில் அவர்கள் இங்கிருக்கின்றனர் என்று நம்புகிறேன். அது நல்ல அதிகாரப்பூர்வமாக எனக்குக் கூறப்பட்டது, அது உண்மையென்று நான் விசுவாசிக்கி றேன். ஆகவே, சகோதரிகளே, உங்களை நான் பாராட்டு கிறேன், அவர்களை மாத்திரம் அல்ல, உபவாசித்தும் ஜெபித்துக் கொண்டுமிருந்த மற்றவர்களையும் கூட நான் பாராட்டுகிறேன், இயேசு கிறிஸ்துவின் பேரில் வைத்துள்ள உங்களுடைய அதிசயமான விசுவாசம் என்னைச் சூழ்ந்து கொண்டது.

*இப்போது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?, 54-0307E, பத்தி எண் 8*

**நீங்கள் உபவாசித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிவேன். உங்களில் அநேகர் ஜெபித்துக் கொண்டிருக்கி றீர்கள்.** அதன் காரணமாகத்தான் நீங்கள்... இன்றிரவில், அவ்வளவு வியக்கத்தக்க ஒரு ஆவி இங்கே உள்ளது. அது எவ்வாறு அசைவாடுகிறது, அது அசைவதை என்னால் உணர முடிகிறது.

*நான் ஏன் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிறேன், 54-0314, பத்தி எண் 58*

ஆகவே, இன்றிரவில் இந்த ஜெபக்கூட்டத்தைத் தொடங்க நாம் இங்கே கூடியிருக்கிற வேளையில்: நோயாளி களுக்காக ஜெபிப்பதற்கும், இயற்கைக்கு மேம்பட்டவை களுக்காக தேவனை விசுவாசித்தவர்களுமாய் கூடி வந்திருக் கிறோம்; இங்கு கூடியிருக்கிற ஒவ்வொருவரும், எல்லா

நேரங்களிலும் ஜெபிப்பதற்காக தங்கள் மேல் பொறுப்பு எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். **உங்கள் வீடு களில் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருங்கள். பெரிய எதிர்பார்ப்புகளோடு வாருங்கள். நீங்கள் எதையும் எதிர் பார்க்கவில்லையென்றால், நீங்கள் ஒன்றையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை. நீங்கள் எதிர்பார்ப்பது எப்படியோ, அப்படியே பெற்றுக் கொள்வீர்கள்.**

*ஐயன்மீர், நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம், 54–0328, பத்தி எண் 1*

அதன்பின்பு, நண்பர்களே, உங்களில் அநேகர், ஜெபித்துக் கொண்டும், உபவாசித்துக் கொண்டுமிருக்கி றீர்கள், மேலும் எதற்காக ஜெபிக்கிறீர்களோ அதைப் பற்றிக் கொள்ள பயப்படுகிறீர்கள். அது சரியே. பாருங்கள்? நல்லது, அம்மாதிரியான சூழ்நிலையில், அதனுடன் சில கிரியை களையும் செய்யாதபட்சத்தில், நீங்கள் உபவாசித்து ஜெபிப் பதினால், உங்களுக்கு ஒரு நன்மையும் இல்லை, அங்கி ருந்து முன்சென்று, அதனுடன் எதிர் எதிரே வழக்காடி, அதை எடுக்காத பட்சத்தில், இந்த உலகத்திலிருக்கிற உங்களுடைய எல்லா விசுவாசமும், ஒரு சிறு துண்டளவு கூட நன்மை பயக்காது. அவ்வளவு தான். நீங்கள் முன்னேறிச் சென்றாக நீங்கள் அங்கிருந்து கடந்து சென்று, அதை எப்படியும் செய்தாக வேண்டும். நீங்கள் எதைக் கேட்கும் போதும், சென்று பெற்றுக் கொள்ளுங்கள். அது உங்களுடையது என்று தேவன் சொன்னார், ஆகவே குறைவாக எதையும் எடுக்காதீர்கள். எதைக் கேட்டீர்களோ அதைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் அதைச் செய்து, அது எப்படி வருகிறது என்று கண்டு கொள்ளுங்கள். ஆம். நீங்கள் பின்வாங்கி, “நல்லது, இரண்டாம் தரமானதை

எடுத்துக் கொள்வேன்" என்று கூறாதீர்கள் — அவ்வாறு கூறாதீர்கள்.

நான் முதல் தரமானதையே எடுத்துக்கொள்வேன். தேவன் எனக்கு முதல் தரமானதை வாக்குத்தத்தம் செய்துள் ளார்; அதையே நான் விரும்புகிறேன். இந்த இருபத்து மூன்று வருடங்களாக நான் அவருக்கு ஊழியம் செய்துள்ளேன், அவர் எனக்கு அந்த ஸ்தானத்தைத் தந்துள்ளார். மேலும் நான்... நான் அவரை விசுவாசித்து, அவரை நேசிக்கும் காலம் வரை, அவர் என்னை நேசிக்கிறார், அது அவ்வித மாகத்தான் இருக்கும், ஏனென்றால் அவருடைய வார்த் தைக்கு அவர் கட்டுப்பட்டுள்ளார். "நீங்கள் ஜெபிக்கும் போது நீங்கள் விரும்புகிறது எதுவோ, அதைப் பெற்றுக்கொண் டீர்கள் என்று விசுவாசிக்க வேண்டும், அப்போது அதைப் பெற்றுக் கொள்வீர்கள்." அதைத் தான் அவர் கூறினார். அது சரியா?

*மீட்பு சந்தோஷத்தில் நிறைவடைகிறது, 54-0330, பத்தி எண் 27, 28*

இயேசு யோவானைப் பற்றிப் பேசுகிறார், "நீங்கள் யாவரும் யோவானைப் பார்க்கப் போனீர்கள்" என்று. "யோவான் இங்கிருக்கும் போது, ஒரு மகத்தான நேரத்தைப் பெற்றிருந்தீர்கள்" என்று கூறினார். "ஒரு குறிப்பிட்ட காலம் வரையில், அவனுடைய வெளிச்சத்தில் நடக்க விரும்பி னீர்கள். யோவான் புசிக்காதவனாக, குடிக்காதவனாக வந்தான். **யெருசலேம், யூதேயா முழுவதும் ஒரு அசைவு வருமட்டுமாக உபவாசித்து மகத்தான கூட்டங்களைக் கொண்டிருந்தான்.** யோவான் இயேசு கிறிஸ்துவுக்குரிய சாட்சியை உடையவனாயிருந்தான். அதன்பின்பு இயேசு

வந்த போது, அடையாளங்கள், அற்புதங்களுடன், யோவா னுடைய ஊழியத்தை உறுதிப்படுத்தினார், அவர்கள் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை" என்றார். கர்த்தர் தாமே இப்பொழுது ஆசீர்வதிப்பாராக. கூட்டங்கள் முடியும் வரையும், இனிமையான ஆவியுடன் கூடிய ஜெபத்தில் நீங்கள் தரித்திருப்பீர்களாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து, நான் உண்மையாகவே சாட்சி பகர்ந்திருப்பேனேயானால், அது சத்தியமாயிருக்கிறது, அவர் இந்த இரவில் இங்கு வருவார் என்று அறிவேன், சொன்ன வார்த்தைகளை உறுதிப்படுத்துவார்.

*உன்னுடைய விசுவாசம் உன்னை இரட்சித்தது, 54–0411, பத்தி எண் 28*

சுகமாக்கும் ஆராதனைக்கு நாம் செல்வதற்கு முன்பாக, இப்போது [பரிசுத்த வேதாகமத்தின்] வேதவாக்கி யங்களில் ஒரு சிறிய பகுதியை வாசிக்க விரும்புகிறேன், பின்னர் ஏறக்குறைய ஐந்து நிமிடம் பேசப்போகிறேன். அது பரிசுத்த மாற்கு எழுதின சுவிசேஷத்தில் காணப்படுகிறது. உங்களில் அநேகர் அதைக் குறித்துக் கொள்ள விரும்பி னால், பரிசுத்த மாற்கு 11–வது அதிகாரம், 20–வது வசனத்தில் இருந்து தொடங்குகிறது, ஒரு பகுதியை இங்கே நான் வாசிக்கிறேன்.

**மறுநாள் காலையிலே அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயி ருக்கிறதைக் கண்டார்கள்.**

**பேதுரு நினைவுகூர்ந்து அவரை நோக்கி: ரபீ, இதோ, நீர் சபித்த அத்தி மரம் பட்டுப் போயிற்று என்றான்.**

**இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.**

இந்த சம்பவமானது மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாக உள்ளது, வேதாகம வாசகர்கள் அனைவரும், அதிக அதிகமாய் வேதத்தை வாசிக்கிறவர்கள் இந்நிகழ்ச்சியை அறிவார்கள். **இயேசு ஒரு சாதாரண மனிதனைப் போல மலையிலிருந்து இறங்கி வந்தார், இரவெல்லாம் உபவாசித்த ஒரு மனிதனாக இருந்தார்.** அவர் ஏதாவது புசிக்க கிடைக்குமா என்று காணும்படி மரத்தை அண்ணாந்து பார்த்தார்.

*தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், 54-0900, பத்தி எண் 6*

ஆனால், என்னுடைய சபைக் கூட்டத்தாரைத் திருப்திபடுத்தும் அளவிற்கு, தகுதியுள்ள பிரசங்கியாக நான் இல்லை என்று நான் உணர்கிறேன். அது... சுகமாக்குகிற ஊழியமாக இருக்கிறது. கர்த்தருக்குச் சித்தமானால், நாளை இரவில், 6:30 அல்லது 7 மணிக்குத் தொடங்கி, ஜெப அட்டைகள் கொடுக்கப்படும். **இந்த இரவிலிருந்தே, சரியாக இந்த மணி நேரத்திலிருந்தே நான் உபவாசிக்கப் போகிறேன்.** நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கப் போகிறேன் [அல்லது காலையிலிருந்து தொடங்கப் போகிறேன்.] மறுபடியும் தேவனுடைய தூதனுடைய அபிஷேகத்தைத் திரும்பக் கொண்டு வரப் போகிறேன். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் ஒரு தாக்கத்தை என்னால் ஏற்படுத்த முடியாமற் போனாலும், அவ்வாறு நான் நம்புகிறேன், தேவனுடைய வியாதியுள்ள பிள்ளைகளுக்காக நான் ஜெபிப்பேன். நாளை இரவு, இங்கே நாம் சுகமாக்கும் ஆராதனைகளைக் கொண்டிருப்போம். நாளை பிற்பகல்,

தேவனுக்குச் சித்தமானால், நான் ஒரு பொருளைக் குறித்துப் பிரசங்கம் செய்ய விரும்புகிறேன். நாளை மத்தியானத்திற்குப் பிறகு, அல்லது நாளை இரவில் – ஞாயிறு பள்ளி நேரத்தில், "ஏன் நானாக, நான் என்னவாக இருக்கிறேன்." வாருங்கள். உங்களுக்கு... அது... ஒருவேளை உங்களுடைய சபை ஆராதனை முடிந்த பிறகாக இருக்கும். நாளை இரவு.

*தேவன் அவருடைய சபையைப் பூரணப்படுத்துகிறார்*, 54–1204, பத்தி எண் 83

**நான் சொன்னது போல, உபவாசிக்கிறதினால் விசுவாசம் வராது.** ஒரு புஸ்தகத்தை வாசிப்பதினாலேயோ, ஜெபிப்பதி னாலேயோ விசுவாசம் வருவதில்லை. அவைகள் யாவும் நல்லது தான்: உபவாசிப்பது, ஜெபிப்பது, வாசிப்பது – ஒரு புத்தகத்தை வாசிப்பது. ஆனால் விசுவாசம் என்பது – அது மனித இருதயத்தில் பதிந்திருக்கிற ஒன்றாகும், இன்று இரவில் நீங்கள் சபைக்கு வந்திருப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமுடையதாயிருக்கிறது என்று கூறும்... நீங்கள் வீட்டிற்கு வந்த போது, ஆராதனை முடிந்த பிறகு நீங்கள் வீட்டில் இருப்பதாக உங்கள் மனைவியினிடத்தில் கூறினீர்கள், அதைத் தெரியாமல் சொல்லி விட்டீர்கள். நீங்கள் சற்று வெளியே சென்று, வாகனத்தை அடைந்து, வீட்டிற்குச் செல்கிறீர்கள். இப்போது, அதைச் செய்ய முடியும் என்கிற விசுவாசம் உங்களுக்கு இல்லாவிட்டால், அதைச் செய்ய முடியாது. உங்களால் எழுந்திருக்க முடியும் என்று உங்களுக்கு விசுவாசம் இல்லையென்றால், நீங்கள் எங்கே உட்கார்ந்திருக்கிறீர்களோ அங்கிருந்து உங்களால் நகர முடியாது. ஆனால் அவ்வளவாய் நீங்கள் அதைச் செய்துள் ளீர்கள், அந்தப் பிரமாணங்களோடு நீங்கள் அவ்வளாவாய் பழக்கப்படுத்திக் கொண்டீர்கள், அது ஒரு சாதாரண

இயற்கையாய் [எதேச்சையாய்] நடப்பது போல இருக்கும் அளவுக்கு.

*விசுவாசத்திற்கு அடிப்படையான அஸ்திபாரம், 55-0113, பத்தி எண் 13*

ஆகவே காலதாமதமாய் வந்தடைந்தோம். இக்கட்டான ஒரு இரவு நேரத்தை நான் பெற்றிருப்பேனேயானால், அது இந்த இரவு தான். மறுபடியும் இங்கே வருவது, அதன்பின்... **அறைக்குச் சீக்கிரமாகச் செல்வேன் என்றும் உபவாசத்திற்குச் செல்வேன் என்றும் ஜெபிப்பேன் என்றும் எண்ணினேன். நாங்கள் புசிக்கவில்லை, ஆகவே அவ்வாறு செய்வதென்று தீர்மானித்தோம்.** அந்த அறைக்குள், அதற்குள் நான் சென்ற போது – ஜெபிக்கச் சென்ற போது, என்னுடைய பரிசுத்த வேதாகமத்தை எடுத்தேன், நான் மிகவும் களைப்புற்றிருப்பதை உணர்ந்தேன். ஒரு நாற்காலியில் சற்று உட்கார்ந்தேன். பிற்பகல் கூட்டத்தை முடித்துக் கொண்டு, அவர்கள் திரும்ப வந்த போது, அவர்கள் என்னை எழுப்பினார்கள். நான் தூங்கச் சென்றேன்.

*கன்மலையின் தண்ணீர், 55-0224, பத்தி எண் 3*

நாம் பீட அழைப்புகளைக் கொண்டிருக்கிறோம், மேடையைச் சுற்றிலும் ஜனங்களைக் கொண்டு வருகிறோம். அது – சபையின் ஒரு நல்ல பாரம்பரியமாகும், ஆனால் வேதாகமக் காலத்தில், "கர்த்தரில் விசுவாசம் வைத்தவர்கள் அனைவரும்..." என்றிருக்கிறது. அவர் எங்கிருந்தாலும், அவரை ஏற்றுக் கொண்டார்கள். "விசுவாசித்தவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டார்கள்.

அவர்கள் பீட அழைப்புகளைக் கொண்டிருக்கவில்லை. அது முதலாவதாக மெத்தடிஸ்ட் சபையில்

தொடங்கினது, ஏறக்குறைய தொடக்க கால மெத்தெடிஸ்ட் சபைகளில் பீடத்தண்டை வருவது அனுசரிக்கப்பட்டது. அது நல்ல காரியம் தான். அது ஒழிந்து போக நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. அதைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும். அது நல்ல காரியம் என்று எண்ணுகிறேன். அங்கே கடந்து சென்று, தேவனுக்கு முன்பாக உங்கள் இருதயத்தை ஊற்றுங்கள். அதைச் செய்ய வேண்டிய வழி அதுதான். ஆனால் உண்மையாகவே அது உங்களை இரட்சிக்கப்போவது இல்லை. பலிபீடத்தண்டையிலேயே நீங்கள் தரித்திருக்கலாம், இரவு முழுக்க ஜெபிக்கலாம், முறையிடலாம், அப்பீடத்தண்டை மேலும் கீழும் நடக்கலாம். உங்களால் முடிந்த ஒவ்வொரு நோன்புகளையும் செய்ய முடியும். நீங்கள் கொண்டிருக்கிற யாவற்றையும் நீங்கள் விற்கலாம், ஏழைகளுக்குக் கொடுக்கலாம். **நீங்கள் நாற்பது நாள் அளவும் உபவாசிக்கச் செல்லலாம். நீங்கள் மிக மிக சோர்வுற்று, நடக்கக் கூட முடியாத அளவிற்கு உபவாசம் இருக்கலாம், முதலாவது (அவரை) ஏற்றுக்கொண்டு... மட்டுமாக, அது ஒருபோதும் உங்களுக்கு எந்த நன்மையும் பயக்காது. அது அவ்வாறு தான் உள்ளது. அது உங்களுடைய பாகமாகும். தேவன் அவருடைய பாகத்தைச் செய்து முடித்து விட்டார். இப்போது, உங்க ளுடைய பாகத்தை நீங்கள் செய்யுங்கள், அதை விசுவாசிப்பது ஒரு சிறிய காரியமாகத்தான் உள்ளது. அதை நீங்கள் விசுவாசிக்கும் போது, அது என்றென் றைக்குமாக நிலை நிற்கிறது.**

*மகிமையடைந்த இயேசு, 55–0225, பத்தி எண் 29*

அந்தக் கூட்டத்தைக் காண விரும்புகிறேன். பவுல் நேராக அங்கே சென்றான், வேதபாட சாலைக்குச் செல்ல வில்லை, ஆனால் அவன் அரேபியா தேசத்திற்குச் சென் றான், தான் என்ன செய்ய வேண்டும் என்பதை கர்த்தர் அவருக்கு காண்பிப்பது வரைக்கும் அங்கே மூன்று வரு டங்கள் தரித்திருந்து உபவாசத்திலும் ஜெபத்திலும் இருந்தான்.

*பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம், 55–0501E, பத்தி எண் 43*

நாற்பது நாளளவும் உபவாசிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்ல இந்த உலகத்தில் எதுவுமே இல்லை, ஒரு காரியமும் இல்லை. தேவன் சொல்லாத பட்சத்தில், நீங்கள் உபவாசிக்க வேண்டும் என்று கூறு வதற்கு உலகத்தில் எதுவுமே இல்லை. நீங்கள் உபவாசித் தால், நீங்கள் பசியடையப்போவதில்லை, இந்தக் காரியங் கள் அனைத்தினூடாகவும் செல்வீர்கள். சகோதரனே, உங்கள் உபவாசத்திற்குப் பிறகு, எல்லா நேரங்களிலும் மகிழ்ச்சியும் சந்தோஷமுமாய் இருப்பீர்கள்.

மாய்மாலக்காரர்களைப் போல, கவலையுடனும், முகத் தைத் தொங்கப் போட்டவர்களாகவும் மனிதர்களுக்கு முன் பாக காட்சியளிக்காதீர்கள். நான் நாற்பது நாள் உபவாசம் இருக்கிறேன்; என்னுடைய என்னுடைய பொய் பற்களை இணைப்பதற்கான அடித்தகடுகள் இனிமேல் எனக்குப் பொருந்தாது, முப்பது பவுண்டு எடை குறைந்து விட்டது, இது முடிந்த பிறகு நான் நன்றாக இருப்பதாக அவர்கள் எனக்குக் கூறினார்கள்" என்று கூறுகிறார்கள். ஓ, அறிவு கெட்டவனே, அது பிசாசின் வஞ்சிக்கிற ஆவிகளாகும்.

*வஞ்சிக்கிற ஆவிகள், 55–0724, பத்தி எண் 111f*

அதற்குப் பிறகு, ஏறக்குறைய இரண்டு வருடம் கழிந்த பிறகு, பின்லாந்திலுள்ள குவோபியோ என்ற இடத்தில் இருந்தேன். அநேக சகோதரர்கள் என்னை ஒரு கோபுரத்திற்கு கூட்டிச் சென்றார்கள், சுற்றிலும் இருப்பவைகளை எனக்குக் காண்பித்தார்கள். **இந்தக் கூட்டங்களின் போது, அநேக முறை நான் அதிகமாய்ப் புசிக்கவில்லை, சில நேரங்களில் பல நாட்கள் உபவாசம் இருந்தேன். பின்னர் மூன்று அல்லது நான்கு நாட்கள் உபவாசித்திருக்கிறேன். நான் அவ்வாறு செய்வதற்குக் காரணம் பரிசுத்த வேதாகமம், உபவாசித்து ஜெபிப்பதன் மூலம் மாத்திரமே இவைகள் வெளியேறும் என்று கூறியிருக்கிறது.** என்னுடைய – என்னுடைய மேலாளர்களில் ஒருவராகிய திரு. லிண்ட்சே, “சுகமளித்தலின் சத்தம்” என்ற இதழின் ஆசிரியர் நான், அவரிடம், “ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது” என்று கூறினேன்.

*ஐயா, நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம், 55–0828E, பத்தி எண் 10*

நாளைக்கு இரவில் வாருங்கள்,ஏனென்றால் அதற்கடுத்த நாள் தொடங்க வேண்டும்... **நான் உபவாசிக்கத் தொடங்கி, வருகின்ற சுகமாக்கும் கூட்டங்களுக்கு ஆயத்தமாக வேண்டும்.**

*எங்கே பெந்தெகோஸ்தேயினர் தோல்வியடைந்தார்கள் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன், 55–1111, பத்தி எண் 20*

இப்போது, கவனித்துப் பார்ப்பீர்களானால். பாருங்கள்? இப்போது, ஒரு நபரின் காரணமாக அவர் பலவீனம் அடைந்தார். அவருக்கு முன்பாக நடந்து சென்ற ஸ்திரீ

அவரைத் தொட்டு விட்டு, தூரமாய்ச் சென்று விட்டாள். இப்போது... நான் என்னுடைய பாதத்தின் நுனி விரல்களில் நிற்பேனேயானால், அதே சம்பவம் மீண்டும் நிகழுகிறது. **இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பதாக, அது எனக்கு உபவாசித்து ஜெபிக்கிற நேரமாக இருந்தது. இந்த மணி நேரங்களில், நான் ஜனங்களிடத்தி லிருந்து என்னை ஒழித்துக் கொள்வதற்கு அதுவே காரண மாகும். நான் எங்கே இருக்கிறேன் என்பதை ஒருவரும் அறியாதபடிக்குச் செய்து கொள்வேன். இப்போதே ஒரு அறையில் என்னை மறைத்துக் கொள்கிறேன்.**

*இருளான நேரம், பின்பு இயேசு அங்கு வருகிறார், 55–1114, பத்தி எண் 30*

**கிறிஸ்தவம் என்பது ஏதோவொன்றல்ல, தேவனை அடைவதற்காக நீங்கள் இரந்து, அழுது முறையிட்டு, உபவாசித்துப் பசியாயிருந்து இப்படிப்பட்ட பல காரியங் களை தேவன் செய்ய மாட்டார். நிச்சயமாக இல்லை. உபவாசம் இருப்பதை நான் கனவீனப்படுத்தவில்லை.**

ஆனால், இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பாக, உபவாசம் என்ற பொருளில் ஒரு மனிதன் புத்தகம் ஒன்று எழுதினார். என்னே, கூட்டத்திற்கு வருகிற ஸ்திரீகள், மனிதர்கள், அப்படிப்பட்ட உபவாசம் செய்தவர்கள் பயித்திய மாகி விட்டார்கள். அவர்கள் அவ்வாறு பயித்தியமானதற்குக் காரணம் அந்த புத்தகம் நாற்பது நாள் உபவாசிக்க வேண்டும் என்று கூறுகிறது. அவர்களில் சிலர் பொய் பற்களை இணைப் பதற்கான அடித்தகடுகளையும், அவர்கள் பற்கள் விழுந்து போனவர்களாயிருக்கின்றனர். அவர்களுடைய கண்கள் உள்ளே சொருகிப் போயிற்று. தாய்மார்கள் இருக்க வேண்டிய விதமாவது... ஸ்திரீகள் தாய்மார்களாயிருக்க வேண்டும்.

நீங்கள் புரிந்துள்ளபடி, அவர்களுடைய சிறு பிள்ளைகள், அவர்கள் முற்றிலுமாக நினைவிழந்து விட்டார்கள், மனநிலை பாதுகாப்பகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டார் கள். அநேகர், அவர்களில் அநேகர் அப்படிப்பட்ட நிலைக்கு வருகிறார்கள். **உபவாசம் இருப்பதை நான் விசுவாசிக்கி றேன். நிச்சயமாக. ஆனால், நீங்கள் உபவாசிக்கும்போது, நீங்கள் பசியாயிருப்பதில்லை. இயேசு, அவர் உபவாசத்தில் இருந்த பிறகு, "அவர் பசியாயிருந்தார்" என்று வேதம் கூறுகிறது. தேவன் நீங்கள் உபவாசிக்க வேண்டும் என்று கூறுகிறார். நீங்களே உங்களை அதில் தள்ளி விடாதீர்கள்.** அவர் உண்மையாகவே ஸ்திரீகளைக் கவர்ந்து விட்டார். அந்த புத்தகத்தை எழுதின மனிதன், அவர் சொல்லும் போது, அங்கே ஒரு ஸ்திரீயின் படத்தைப் போட்டுள்ளார், அவள் இருபது வயதுள்ள இளம் பெண்ணாக காணப்படுகிறாள். அது அவளுடைய உபவாசத்திற்குப் பின்னர் என்று கூறப்பட்டுள் ளது. நீங்கள் அவளைப்பார்க்க வேண்டும், அதற்கும் ஏறக் குறைய ஒரு வருடத்திற்கு பின்பு அவள் எவ்வாறு காணப்பட்டாள், அதற்குப்பிறகு அவள் எவ்வாறு தோற்ற மளிக்கிறாள் என்பதாக உள்ளது. பாருங்கள்? நிச்சயமாக.

நீங்கள் அதைச் செய்யக் கூடாது. கிரியைகளினால் நீங்கள் எதுவும் செய்யக்கூடாது. அது கிருபையினால் உண்டாக வேண்டும். தேவன் அவருடைய இராஜாதிபத்திய கிருபையின்படி...

*உள்திரை, 56–0121, பத்தி எண் 26*

**ஆனால், நாம் அனுபவத்தின் மூலமாக இரட்சிக்கப் படவில்லை, உபவாசத்தினாலோ அல்லது ஜெபத்தினா லேயோ அல்ல. நாம் இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழி**

தான் உண்டு; அது வார்த்தையின் மூலமாக உண்டாகிற விசுவாசமே. “விசுவாசம் கேள்வியினால் வருகிறது; தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது.” நாம் இரட்சிக்கப்படுவதற்கு அது ஒரு வழி தான் உண்டு.

*தேவன் தம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்ளுகிறார், 57–0307, பத்தி எண் 6*

இந்தக் கூட்டங்களுக்கு வரும்போது, நான் ஏறக் குறைய மூன்று மணி தொடங்கி என்னுடைய அறையில் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருப்பேன், கர்த்தருக்குள் காத்திருப்பேன். ஏனென்றால் இன்று இரவு நீங்கள் அப்படிப்பட்ட விசுவாசமுள்ள குழுவினர் என்று நம்புகிறேன். அது மட்டுமே. உங்களுடைய ஜெப அட்டைகள் எனக்குத் தேவையில்லை என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், ஜெப அட்டைகளை வைத்துள்ளவர்கள் யாராவது இருக்கின்றனரா. பயபக்தியாயிருங்கள்.

*விசுவாசம், 58–0315, பத்தி எண் 64*

பின்பு, இன்றிரவில் நாம் வரும் போது, நாம் ஒரு பரிசுத்தமுள்ள மைதானத்தின் மேல், ஜெபிக்கிற, உபவாசிக்கிற, எல்லாவற்றையும் சீர்படுத்துகிற தேவனிடத்திலிருந்து எதையாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிற (நோக்கத்தோடு) ஆயத்தமாயிருக்கிற ஜனங்கள் மத்தியில் வந்திருக்கிறோம். பசியோடு வந்தவர்கள் யாரும் பசியோடு செல்ல மாட்டார்கள், ஆனால் தேவன் ஜீவ அப்பத்தினாலும் அவர்களை போஷிப்பார் என்பதை நான் அறிவேன்.

*பரிசுத்த ஆவி என்றால் என்ன?, 59–1216, பத்தி எண் 13*

இங்கே என்னுடைய மருமகள் அமர்ந்திருக்கிறாள், கர்த்தாவே, சிறிய லாய்ஸ் பசியோடும், தாகத்தோடும், உபவாசத்தோடும் காத்துக் கொண்டிருக்கிறாள். அங்கே பின்னாலே என்னுடைய சகோதரி தூரத்தில் பசியோடும், தாகத்தோடும், உபவாசத்தோடும் காத்திருக்கிறாள். ஓ, கர்த்தாவே, எப்படியாயினும் பரிசுத்த ஆவியை இந்தக் கட்டிடத்தினுள் அனுப்பி, உயிர்த்தெழுந்த வல்லமையோடு அவர்களுடைய ஆத்துமாக்களைத் தொடுவீராக; உயிர்ப்பிக் கும் வல்லமையினால் அவர்கள் தங்கள் கால்களில் எழுந்து நிற்பார்களாக. இயேசு கிறிஸ்துவோடு, அவருடைய உயிர்த் தெழுந்த வல்லமையோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்வார்களாக. கர்த்தாவே, அதை அருளிச் செய்யும்.

*கிறிஸ்துவுடன் அடையாளப்படுத்திக் கொள்ளுதல், 59–1220E, பத்தி எண் 107*

அதன்பிறகு – அதன்பிறகு, எல்லாச் சபைகளும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இப்போது என்னுடைய மருமகள் இங்கே அமர்ந்திருக்கிறாள். அவள் என்னுடைய மருமகள் என்பத னால் அல்ல, அவள் இங்கிருப்பதனால் அல்ல, அவள் நான் அறிந்த பெண்களிலேயே மிகவும் அருமையானவர்களில் ஒருவள்; லாய்ஸ் நல்ல சிறந்த ஒரு பெண் ஆவாள். மகத்தான பின்னணியிலிருந்து அவள் வந்திருக்கிறாள், அவள் வந்த குடும்பமானது கடவுளையும் மற்றதையும் ஆராதிப்பவர்கள் அல்ல. அந்த பிள்ளைக்காக நான் வருந்து கிறேன். அவள் அப்படியாக வர வேண்டியதாயிற்று. இப் போது, அவள் பரிசுத்த ஆவியை நாடித் தேடிக் கொண் டிருக்கிறாள், அவள் எழுந்து நிற்கக் கூட முடியாத அளவுக்கு

**உபவாசித்தாள், பரிசுத்த ஆவிக்காக உபவாசித் தும், ஜெபித்தும் கொண்டிருக்கிறாள்.**

*கேள்விகளும் பதில்களும், 59–1223, பத்தி எண் 469–8*

நான் கற்பனை செய்து பார்க்கிறேன், எங்கோ ஓரிடத்தில் அந்தப் படகில் மேலும் கீழுமாக நடந்து கொண்டிருக்கிறான், அல்லது அந்தக் கப்பலின் தடித்த முன்பகுதியில் நின்று கொண்டு, “நல்லது, கர்த்தாவே, நான் ஒருவேளை இந்தக் கடலில் இருக்கும் போதே உம்மிடத்தில் வந்து விடுவேன்” என்று கூறுகிறான். மேலும் கீழுமாக நடந்து, அந்த இரவில் ஒரு நல்ல நேரத்தைப் பெற்றவனாக, மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்து, அவனுக்குப் பின்னால் இருந்த சங்கிலிகளை அசைத்துக் கொண்டும் இருக்கிறான். அடுத்த நாள் காலையில் சடுதியாக படவின் மேல் தட்டுக்கு ஓடி வருகிறான், அந்த வயதான சிறிய கரங்களில் சங்கிலிகள் கட்டப்பட்டுள்ளன, அவனுடைய கால்களில் கட்டப்பட்ட சங்கிலிகள் தரையில் அவனுக்குப் பின்னால் இப்படியாக இழுப்பட்டுக் கொண்டு வருகிறது. இப்படிக் கைகளை அசைத்துக் கொள்கிறான், பயித்தியம் பிடித்த ஒரு மனித னைப் போல, “தைரியமாயிருங்கள், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அல்லேலூயா” என்று கூறுகிறான். பையனே, உனக்குள்ள காரியம் என்ன? வளைந்த மூக்கைக் கொண்ட அந்தச் சிறிய யூதன் கைளை அசைத்துக் கொண்டிருக்கி றான், தொடர்ந்து பயணம் செய்கிறான்.

“பவுலே, என்ன காரியம்?”

“தைரியமாயிருங்கள், அங்கே சென்று ஏதாவது புசியுங் கள். நீண்ட நாட்களாக ஒன்றும் புசியாமலிருக்கிறீர்கள்.

நீண்ட நாட்களாக உபவாசத்தோடு இருக்கிறீர்கள். ஏதாவது புசியுங்கள். தைரியமாயிருங்கள்; யாருக்கும் சேதம் ஏற்படாது” என்றான்.

“பவுலே, எவ்வாறு அவ்வளவு நிச்சயமுடையவனாக இருக்கிறாய்? உனக்கு என்ன சம்பவித்தது? நீ பயித்தியமாகி விட்டாயா? நினைவு இழந்து விட்டாயா? ஒரு வேளை மனநிலை பாதிக்கும் அளவுக்கு நீ உபவாசம் இருந்திருக் கலாம்.”

“ஓ, இல்லை, இல்லை. நேற்று இரவில் தேவனுடைய தூதன் என்னருகே நின்றார். நான் அவருடைய ஊழியக் காரன். அந்தத் தூதன், “பவுலே, பயப்படாதே” என்று சொன்னான். அல்லேலூயா. “அவர், உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படாது” என்று கூறினான். நான் தேவனை விசுவாசிக்கி றேன். எனக்கு அவர் சொன்னபடியே நடக்கும்.” என்ன? அவன் கேட்டான். அது தேவன் தான் என்று அடையாளங் கண்டு கொண்டான். ஒன்றும் சம்பவிப்பதற்கு முன் செயலில் இறங்கினான்.

*கேட்டு, பெற்று, செயலில் இறங்குதல், 60–0607, பத்தி எண் 56*

“நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், அது இங்கே இருக்கிறது: இதைச் சொல்வதற்கு அவன் விரும்பவில்லை, ஆனால் என்னுடைய சகோதரன் இங்கு உட்கார்ந்திருக்கிறார், ஜீன் கோட், என்பவர், **அந்தப் பிள்ளை அநேக நாட்களுக்கு தண்ணீரையோ அல்லது ரொட்டியையோ தொட மாட்டான். உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருப்பான்.** இங்கே பாட் டெய்லர் அமர்ந்திருக்கிறார். அவருக்கருகில் அமர்ந்துள்ள வேறொரு சகோதரன். **அந்த மனிதர்கள் உணவு இன்றி, தண்ணீரின்றி, நான் கூட்டங்**

களில் இருக்கும் போது, முகத்தைத் தரையில் பதித்த வர்களாய் எனக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறவர்கள். அங்கிருந்து தான் அது வருகிறது. அப்படிப்பட்ட ஒன்று இல்லாமற் போனால், நான் கீழ் தள்ளப்பட்டிருப்பேன்.”

திரைக்குப் பின்னால் இருக்கக் கூடிய மனிதர்கள் அவர்கள். செய்திக்கு பலம் கொடுக்க வேண்டும் என்று ஜெபிக்கிற மனிதன், அவர்கள் எல்லாவற்றையும் புறம்பே தள்ளி விடுகிறார்கள். ஒருவேளை [அப்படிப்பட்ட] அந்தக் காரியங்களைச் செய்வதற்கு அவர்கள் வரம் பெற்றவர்களாய் இல்லாதிருக்கலாம். ஆனால் அதைத் தாங்குவதற்காக ஒவ்வொரு முயற்சியும் எடுக்கிறார்கள். அவர்கள் செய்யக் கூடும் என்று அறிந்திருக்கிற ஒரே வழி தேவனுக்கு முன்பாக ஜெபிப்பதும், உபவாசிப்பதுமாகும். அங்கே தான் வல்லமை இருக்கிறது: யாராவது ஒருவர் உங்களுக்கு ஜெபிக்க அனுமதியுங்கள்.

*பயப்படாதிருங்கள், 60–0609, பத்தி எண் 14*

ஏதோவொன்று, சிறந்த விசேஷித்த ஒன்று நடப்பதற் காக, அது ஜனங்களுடைய இருதயங்களை வெற்றி கொள்ளும் ஏதோவொன்றிற்காக நான் உபவாசம் இருந்துள் ளேன்.

*ஏன், 61–0125, பத்தி எண் 8*

ஆகவே ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று நாட்கள் உபவாசம் எடுத்தேன், அந்த நாள் பிற்பகலில் பிரசங்கம் செய்யப் போனேன். “நல்லது, அவ்விதமாகத்தான் காணப்படுகிறது...” நீங்கள் உபவாசிக்க நடத்தப்படும் வரை ஒருபோதும் உபவாசிக்க விரும்பாதீர்கள். உங்களுக்குப்

**பசியெடுத்தால், அதுவே புசிக்கிற நேரமாகும்.** “அதற்குப் பிறகு இயேசு பசியுள்ளவராக இருந்தார்.” இவர்களில் சிலர் கூறுகிறார்கள், இந்த ஜனங்கள் உபவாசித்து, “நான் நாற்பது நாள் உபவாசிக்கப் போகிறேன்” என்று கூறுகிறார்கள். பொய்ப்பற்கள் எல்லாம் விழுந்து விடுகிறது, எடை குறைந்து விடுகிறது, மேலும்... என்னே, நீங்கள் அதை நிறுத்துவது நல்லது. அப்படிப்பட்ட காரியங்களில், அதைச் செய்ய தேவன் உங்களை வழிநடத்தும் வரை காத்திருங்கள். ஆவியினால் வழிநடத்தப்படுவீர்களாக.

*ஏன்?, 61–0125, பத்தி எண் 9*

**நான் ஜெபிக்கிறேன், உபவாசிக்கிறேன், தேவனுடைய (சமூகத்தில்) காத்திருக்கிறேன்.** நான் இங்கு கலிபோர்னியா வில் இருக்கும் போது, என்னுடைய பாகத்தை செய்ய நான் விரும்புகிறேன். நீங்கள் உங்களுடைய பாகத்தைச் செய்யுங் கள். வெளியே புறப்பட்டுச் சென்று ஜனங்களை உள்ளே கொண்டு வாருங்கள். இயேசு கிறிஸ்து பூமியிலிருந்த நாட்கள் முதற்கொண்டு நாம் அறிந்த காரியங்களைக் காட்டிலும், இன்று தேவன் மகத்தான காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார். அது சரியே. அது ஜனங்களின் தலைக்கு மேல் செல்லப் போகிறது. அவர்கள் அதைக் காணத் தவறுகின்றனர். அது மோசமான பாகமாகும்.

*ஐயா, நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம், 61–0208, பத்தி எண் 13*

நாம் வீட்டிற்குச் செல்லும் போது, “இன்றிரவில் அவர் தம்மைத் தாமே நம் மத்தியில் அறியச் செய்த போது, நம்முடைய இருதயம் நமக்குள் கொழுந்து விட்டு எரியவில்லையா?” என்று நாம் கூறுவோம். கர்த்தாவே, அது

ஜனங்களை மறுபடியும் ஜெபிக்கவும் உபவாசிக்கவும் செய்யும் என்று நான் விசுவாசிக்கிறேன். மேலும் இந்த சிறிய சபை வளரும், தேவனுடைய வல்லமை இதற்குள் இருக்கும், தீர்க்கதரிசனங்கள், மகத்தான அடையாளங்களும் அற்புதங்களும், பெண்களும் ஆடவரும் தங்களுடைய ஜீவியத்தைச் சரிப்படுத்திக் கொண்டு, தேவனுக்கு முன்பாக மிருதுவாக நடப்பார்கள். ஓ, எப்படிப்பட்ட தேவனுக்குப் பயப்படும் ஒரு பயம் தேசத்தின் மேல் வரும், கர்த்தாவே. அவர்களுக்கு மகத்தான அடையாளங்களையும் அற்புதங் களையும் கொடும். அதை அருளிச் செய்யும். கர்த்தாவே, உம்முடைய சபையை பலப்படுத்தும்.

*ஐயா, நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம், 61–0208, பத்தி எண் 86*

**இந்த வாரம் நான் எதையும் புசிக்கவில்லை, பாலும் நொறுக்கு தீனிகளையுமே புசித்தேன். அது உண்மை. உபவாசித்துக் காத்திருக்கிறேன். எவ்வழியில் ஆவியானவர் என்னை நடத்துவார் என்பதைக் காண்கிறேன்...**

*ஏன்?, 61–0413, பத்தி எண் 16*

**யோவான் வனாந்திரத்திற்குச் சென்றான், அப்போது அவனுக்கு ஏறக்குறைய வயது ஒன்பதாகி இருந்தது, தேவனுக்கு முன்பாக ஜெபித்துக் கொண்டும், உபவாசித்துக் கொண்டும் இருந்தான்.** முப்பது வயதாகும் போது, வனாந் தரத்தை விட்டு வெளியே வந்து, வருகின்ற மேசியாவைக் குறித்து பிரசங்கம் செய்தான்.

*இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார், 61–0516A, பத்தி எண் 31*

"நான் என் சகோதரனாகிய எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திலிருந்து தெரிந்து கொண்டது என்னவென்றால், அநேக அநேக வருடங்களுக்கு முன்பு, இஸ்ரவேலர் இங்கே எழுபது வருடங்கள் தரித்திருப்பார்கள் என்று தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறான், அந்தக் காலம் ஏறக்குறைய நிறை வேறி விட்டது" என்று அவன் கூறினான். அவன் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு, ஒரு உபவாசத்திற்கு அழைப்பு விடுத்தான், தன்னைத் தானே பரிசுத்தப்படுத்திக் கொண் டான். அப்போது, இரட்டுடுத்திக் கொண்டான், தலையில் சாம்பலைப் போட்டுக் கொண்டு, **அவர்கள் எந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்து அறிந் து கொள்வதற்காக உபவாசித்து ஜெபிக்கச் சென்றான்.**

*காபிரியேல் தானியேலுக்கு அறிவுறுத்தினவைகள்*, 61–0730M, பத்தி எண் 78

**இப்பொழுது, இந்த மணி நேரத்தில் நான் சென்ற தற்குக் காரணம், ஒரு வார காலம் உபவாசித்து ஜெபிப் பதற்கே. அது என்னை ஒரு தீர்மானம் எடுக்கும்படி வழிநடத்தினது.**

*நம்ப முடியாது, ஆனாலும் உண்மை*, 61–1210, பத்தி எண் 43

**அவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினர்களாயிருந்து, உபவாசத்திலும் ஜெபத்திலும் தரித்திருந்தார்கள். தேவன் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு பதிலளித்தார்.**

*நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும்*, 61–1231M, பத்தி எண் 21

நீங்கள் பாருங்கள்... இப்போது, உபவாசித்து ஜெபித்து கர்த்தரைக் அழைப்பதற்கு ஜனங்களை ஒன்று கூட்டுவதென் பது ஏறக்குறைய முடியாத காரியமாயிருக்கிறது. இந்தக்

கடைசி நாட்களில் சபையானது சோம்பல் உள்ளதாகவும், தூக்கமயக்கத்திலும் இருப்பது போல் காணப்படுகிறது: மிகவும் பரிதபிக்கக்கூடிய நிலையில் உள்ளது. இங்கு வந்து, ஊக்குவித்து பிரசங்கித்து, இப்படிப்பட்ட காரியங்களை சொல்வதை நான் வெறுக்கிறேன். ஆனால், சகோதரனே, சகோதரியே, அதுதான் சத்தியம். அதை நான் அடக்கி வைத்துக் கொள்ள முடியாது. அதுதான் சுவிசேஷம். அது பிரசங்கிக்கப்பட வேண்டும். ஒரு சாட்சிக்காக அது பிரசங்கிக்கப் படவேண்டும். அது உண்மை. ஆகவே, நாம் மிக அதிகமாக யூகிக்கிறோம் என்று எண்ணுகிறேன்.

*யூகித்தல், 62–0117, பத்தி எண் 45*

**என்னுடைய தாயார் மரணமடைந்ததிலிருந்து நான் வனாந்தரங்களில் சஞ்சரித்து, ஒரு குகையில் உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு தரிசனம் எனக்கு வந்தது.**

*யூகித்தல், 62–0117, பத்தி எண் 133*

**மூன்று அல்லது நான்கு நாட்கள் அங்கே மேலே உபவாசித்து ஜெபித்துக் கொண்டிருந்தேன்.** அந்தக் குகையில் பூஷணம் பிடித்து விட்டது. ஒரு நாள் மத்தியானத்திற்குப் பிறகு, நான் வெளியே வந்தேன்.

*உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து, 62–0318, பத்தி எண் 102–2*

இன்று நான் என்னுடைய அறையில் இருந்தேன். நாங்கள்... **வழக்கமாக வெள்ளிக்கிழமை எனக்கு உபவாச நாளாகும். சில நேரங்களில் செவ்வாய் கிழமை, வெள்ளிக் கிழமைகளில் நான் புசிப்பது கிடையாது. சில நேரங்களில்**

**மத்தியானம் வரைக்கும் புசிப்பதில்லை.** சற்று சிறிதளவு... அது ஒரு வழக்கமாகக் கொண்டுள்ள உபவாசம் அல்ல. அது வாரத்தில் இரண்டு நாட்கள் உபவாசிப்பதாகும். ஆகவே, தொடர்ந்து உபவாசிப்பதென்பது அதிக நாட்கள் என்னும் கணக்கில் வரும். அது கர்த்தர் உங்கள் மீது சுமத்தும் போதுதான். ஆனால் நமக்கு அது தேவனுடைய மகத்தான நினைவுகூருதலாக இருக்கும், அது தேவனுக்குச் செலுத்து கிற மதிப்பும் மரியாதையுமாகும். **உபவாசிப்பது என்பது ஒரு கட்டளையாக இருக்கிறது. ஆகவே மூன்று மணிக்கு மேல் வழக்கமாக சிறிதளவு ஆகாரமே எடுக்கிறேன்.**

*விடாமுயற்சி*, *62–0608*, *பத்தி எண் 9*

எலியா தீர்க்கதரிசி ஒருநாள் ஏதோவொன்று வருவதற் காகப் பார்த்துக் கொண்டிருந்தான், ஜனங்களுக்கு உதவி யைக் கொண்டு வருவதற்காக அவன் பார்த்துக் கொண் டிருந்தான். எண்பது அல்லது அதற்கு மேற்பட்ட வயது சென்றவனாய், உபவாசித்து ஜெபித்த பிறகு, அந்த வயது சென்றவன் மலையின் மேல் ஏறுவதற்கு மிகவும் களைப் புற்றவனாக இருக்கும் அளவுக்கு அவன் நோக்கினான். ஆனால் தேவன் அவனிடத்தில் கூறினார், அவர்கள் மனந் திரும்பினால் ஏதோவொன்று சம்பவிக்கும் என்று. அவன் எதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்? அவனுடைய வேலைக்காரனை மேலே அனுப்பினான், “மேலே சென்று பார். பார். ஏதோவொன்று சம்பவிக்கப் போகிறது” என்று கூறினான். மூன்றரை வருஷமாக அங்கு மழையே இல்லை, ஒரு மேகமும் இல்லை, பனித்துளி கூட விழவில்லை. ஆனால், அவன், “போய்ப் பார்” என்று கூறினான்.

*நோக்கிப் பார்*, *63–0428*, *பத்தி எண் 206*

இப்போது, இன்றிரவில், நோயாளிகளுக்கு ஜெபிப்ப தற்கு. நான்... நோயாளிகளுக்கு ஜெபிக்கக் கொடுக்கப்படும் அபிஷேகம் என்பது ஒரு... வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக் கும் போது, அது அதே ஆவிதான், ஆனால் இப்பொழுது இருக்கிற இந்த வகையைக் காட்டிலும், ஒரு வித்தியாசமான அபிஷேகமாக இருக்கிறது. **இன்று காலையில் இருந்து நான் ஆகாரம் எடுக்கவில்லை. உபவாசித்து ஜெபித்து இந்தக் கட்டித்திற்கு வந்துள்ளேன்.** நான் பிரசங்கிக்க விரும்பவில்லை. ஆகவே என்னுடைய ஊழியக்காரச் சகோதரன் பிரசங்கிக்கும் போது, நான் அபிஷேகத்தின் கீழ் இருப்பேன். நான் வியாதியஸ்தருக்கு ஜெபிக்கும் போது, கர்த்தருடைய பிரசன்னத்தை உணரும்படி நான் – நான் வாஞ்சிக்கிறேன். ஏனென்றால் நான் இன்றிரவு ஒவ்வொரு வருக்காக ஜெபிக்கும் போது, ஒவ்வொருவரும் சுகமாக்கப் பட வேண்டும் என்று விரும்புகிறேன். அது கர்த்தருடைய மகிமைக்காக நான் – நான் வாஞ்சிக்கிறேன் – தேவன் வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்துவார். அதை அவர் செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

*இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்,*
*63–0627, பத்தி எண் 27*

நாம் பார்க்கிறோம்... ஏன் எங்களுடைய வீட்டை விற்க முடியவில்லை? உங்களுக்கு நன்றி. நாங்கள்... P.S. வீட்டை விற்பதற்காக நாங்கள் உபவாசித்து ஜெபிக்கிறோம். அப்படி யிருந்தும் பலனில்லை.

நல்லது, இப்போது, சகோதரனோ அல்லது சகோதரியோ [அவர்கள் பெயரைக் கையோப்பமிடவில்லை], ஆனால் அது

யாராயிருந்தாலும், இப்போது, உங்கள் சொத்துக்களை விற்க முயற்சிக்கிறீர்கள், உங்களால் [முடிந்த] மட்டும் அதைச் செய்துள்ளீர்கள்... ஒருவேளை இன்னும் கொஞ்சம் அதிகமாய் வாங்குவதற்காகவோ, அல்லது என்ன செய்ய விரும்புகிறீர்களோ அதற்காக விற்க விரும்புகிறீர்கள். எனக்குத் தெரியாது. உங்களுடைய நோக்கம் சரியாக இருந்தால், ஒரு வீடு வாங்க முயற்சிக்கிறீர்கள்... உங்களுக்குக் குழந்தைகளோ அல்லது அதற்கு ஒப்பாக ஏதாவது இருந்தால், அவர்களுக்கு ஒரு நல்ல வீடோ அல்லது ஏதோவொன்றோ வேண்டும் என்று விரும்புகிறீர்கள்... அவைகள் எல்லாம் என்னவென்று எனக்குத் தெரியாது. **ஆனால் நான் இதைக் கூறுகிறேன்: அதை விற்க முயற்சி செய்வீர்கள் என்றால், உபவாசித்து அதை விற்க முயற்சி செய்யுங்கள், பிறகு அதை கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுத்து விட்டு, அதைக் குறித்து மறந்து விடுங்கள். பாருங்கள்? ஏனென்றால், அது தேவனால் நடக்க வேண்டும்...** நீங்கள் எங்காவது அங்கிருந்து வேறு இடத்திற்குச் செல்லலாம், அது ஒருவேளை தவறாக இருக்கலாம். பாருங்கள்?

நீங்கள் கிறிஸ்தவனாக இருந்து, கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைப்பீர்கள் என்றால், ஏனென்றால், நீங்கள் நிச்சயமுடையவர்களாய் இருப்பீர்கள் அல்லது நீங்கள் உபவாசித்து ஜெபிப்பீர்கள். பாருங்கள்? ஆகவே, நான் அதைக் கர்த்தரிடத்திலேயே ஒப்புக்கொடுத்துவிடுவேன். “இப்போது, கர்த்தாவே, அதை நாங்கள் விற்க வேண்டிய உம்முடைய நேரம் வரும் போது, ஒரு வாங்குபவரை அனுப்பி வையும்” என்று கூறுங்கள். அப்போது, அது கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுக்கப் பட்டாயிற்று, அதை விட்டு உங்கள்

கரங்களை எடுத்து விடுங்கள். முன்னேறிச் செல்லுங்கள். அது கிரியை செய்யும் என்று விசுவாசிக்கிறேன்.

*கேள்விகளும் பதில்களும், 64–0823E, பத்தி எண் 1029–Q-300*

★★★★★